# நடப்பு நிகழ்வுகள்- ஜூன் 6 - 2017

- ஆந்திர மாநிலம் **ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 2 – வது ஏவுதளத்தில் இருந்து 05.06.17 அன்று** மாலை 5.28 மணிக்கு G-SAT-19 தகவல் தொடர்பு செயற்கைகோளுடன் கிரையோஜெனிக் **GSLV Mk III-D1 ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.** இந்த வெற்றிகரமான திட்டத்தின் மூலம் மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியில் முதல் கட்ட வெற்றியாக இஸ்ரோ விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

- **உயர் நீதிமன்றங்களுக்கு 44 புதிய நீதிபதிகளை நியமிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.** நாடு முழுவதும் உள்ள 24 உயர்நீதி மன்றங்களில் 40.54 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் மட்டும் 9 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

- **சிங்கப்பூரில்** நடைபெற்ற **ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்திய வீரர் ராம்குமார் ராமநாதன்** அமெரிக்காவின் ரேமண்ட் சர்மீயன்டோவை வீழ்த்தி **சாம்பியன் பட்டம் வென்றார்**.

- இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட தினம் ஜூன் – 6 – 2004.

- தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் கீழ் 8 போக்குவரத்து கழகங்கள் மூலம் சுமார் 22,399 பஸ்கள் இயக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் கணிசமான அளவுக்கு புதிய பஸ்களும் வாங்கப்படுகின்றறன. இந்நிலையில் நடப்பு ஆண்டில் 4,000 பணியாளர்கள் ஓய்வு பெறுகின்றனர். எனவே போதிய அளவு ஆட்களை பணியமர்த்த வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

- **காஷ்மீர் பிரச்சனை குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் பாகிஸ்தானால் முறையிட முடியாது** என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் **சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.**

- அரபு நாடுகளில் அதிக எரிவாயு வளம் கொண்ட நாடுகளில் கத்தாரும் ஒன்று இங்கு 2022 ஆம் ஆண்டுக்கான கால்பந்து போட்டிகள் நடக்கவுள்ளன. அமெரிக்காவின் மிகப் பெரிய ராணுவத்தளம் கத்தாரில் உள்ள அல் உத்தெய்த் நகரில் அமைந்திருக்கிறது. இங்கு சுமார் 10 ஆயிரம் அமெரிக்க படைவீரர்கள் உள்ளனர். **கத்தார் நாடு ஐஎஸ் உள்ளிட்ட இஸ்லாமிய பயங்கரவாதிகளுக்கு மறைமுகமாக நிதி உதவி அளித்து வருகிறது.** இதன் காரணமாக **சவுதி அரேபியா, எகிப்து, பக்ரைன், அமீரகம் ஏமன் ஆகிய நாடுகள் தூதரக உறவுகளை துண்டித்துக் கொண்டனர்.**

- Project 75 - பிரான்சின் DCNS உதவியுடன் 2022ம் ஆண்டுக்குள் டீசலில் இயங்கும் 6 நீர்மூழ்கி கப்பலை இந்தியாவில் உருவாக்குவதாகும் இதற்கான ஒப்பந்தம் 2005 ல் ஏற்பட்டதாகும். இத்திட்டத்தின் படி உருவாக்கப்பட்ட முதல் நீர்மூழ்கி கப்பல் INS Kalvari 2015 ல் சோதனை ஓட்டம் முடித்துள்ளது. இது ஜுலை 2017ல் இந்திய கடற்படையில் இணைய உள்ளது.

- **நேபாளத்தின் புதிய பிரதமராக ஷேர் பஹாதூர் தேவுபா (70) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.** நேபாளி காங்கிரஸ் கட்சி தலைவரான இவர் 4 – வது முறையாக அந்நாட்டின் பிரதமராகிறார்.

- **தமிழகத்தில் முதல்முறையாக மதுரை மாநகராட்சியில் மாற்றுத்திறன் குழந்தைகளுக்காக** பொது நிதி, தனியார் நிதி உதவி பெற்று ரூ 40 லட்சத்தில் **நவீன பூங்கா ஒன்றினை அமைத்துள்ளனர்.**

- உலக பொருளாதாரம் நடப்பு ஆண்டில் 2.7 சதவீதமாக வளர்ச்சி காணும். இது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 2.9 சதவீதமாக அதிகரிக்கும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

- கங்கை பகுதியின் நிலத்தடி நீர் பற்றி ஆராய மத்திய அரசு குழு அமைத்துள்ளது. இக்குழுவில் மத்திய நீர்வளத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் கிராம மேம்பாட்டுத்துறை செலாளர்கள் கொண்ட குழு நிலத்தடி நீர் மட்டத்தை குறித்து ஆராயும்.